

# எண்ணம் உருவான கதை


## சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் 1859 முதல் இற்றை வரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## செயற் கூறு

**செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐசிஆர்சி),**
பக்கசார்பற்ற, நடுநிலையான, சுதந்திரமாக செயற்படும் ஒரு மனிதாபிமான அமைப்பாகும். ஆயுத மோதல்கள் மற்றும் உள்நாட்டுக் கலவரங்களின்போது மக்களை அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்து, கௌரவத்துடன் வாழ அவர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதை ஐசிஆர்சி பிரத்தியேக நோக்காக கொண்டது. முரண்பாடுள்ள சூழ்நிலைகளில் செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் வழங்கும் நிவாரண பணிகளை இது ஒருங்கமைத்து வழிநடத்திச் செல்கின்றது. மனிதாபிமான சட்டங்களையும் சர்வதேசத்துக்குமான மனிதாபிமானப் பண்புகளையும் அறியச் செய்து அவற்றை வலுவூட்டுவதன் மூலம் துன்பங்கள் ஏற்படுவதை தடுப்பதிலும் ஐசிஆர்சி முயற்சியாகவுள்ளது. 1863 ல் ஆரம்பிக்கப்பட்ட ஐசிஆர்சி, சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் உருவாக வித்திட்டது.

**சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனமானது**
தேசிய சங்கங்கள் பாதிப்புற்றோர்க்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல உதவுவதுடன், சர்வதேச மட்டத்திலான நிவாரணப் பணிகளுக்கு ஒருங்கமைப்பை வழங்கி அபிவிருத்திக்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்பதன் மூலம் மனித துன்பங்கள் ஏற்படுவதை தடுப்பதிலும் துயரங்கள் ஏற்படின் தணிப்பதற்கும் முயற்சிகளை எடுக்கும். சர்வதேச சம்மேளனம், தேசிய சங்கங்கள் மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு என்பனவற்றை ஒன்றிணைத்ததே சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கமாகும்.

**தேசிய செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களானவை,**
சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கத்தின் பணியையும், அதன் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு, 187 நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகின்றன. இவை தத்தம் நாடுகளில் அரச நிறுவனங்களின் மனிதாபிமானப் பணிகளில் உதவியாக இருந்து, அனர்த்த நிவாரணம், சுகாதாரம் மற்றும் சமூகநல வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. ஆயுத மோதல் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதுடன், ஆங்காங்கு ஏற்படைய இடத்து, இராணுவங்களின் மருத்துவ பிரிவினர்க்கு உதவிகள் அளித்தும் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

moebius

# எண்ணம் உருவான கதை

## சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் 1859 முதல் இற்றை வரை

இடம் சொல்பரினோ, வட இத்தாலி, அன்று 24 யூன் 1859, பிரான்ஸ், ஆஸ்திரிய படைகள் எதிரெதிர் உக்கிரமாக மோதிக் கொள்கின்றன. அன்றைய தினம், மாலையானதும், 40,000 போர்வீரர்கள் இரு தரப்பிலும் இறந்தோ அல்லது காயப்பட்டோ களத்தில் கைவிடப்பட்டுக் கிடந்தனர். மருத்துவ சேவையினரால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை. அவர்களுக்கோ விசேட பாதுகாப்பு ஏதும் அங்கு இருக்கவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊரான ஜெனீவா திரும்பிய டுனாட் நடந்தவற்றை மறக்க வில்லை. நடந்தவற்றை "சொல்பரினோவின் நினைவுகள்" என்ற தலைப்பில் 1862 ல் நூலாக வெளியிட்டார். இரு முக்கிய யோசனைகளை அதில் முன்வைத்தார்:


- சமாதான காலங்களில் உதவிக் குழுக்களை அமைத்து அத் தொண்டர்களை பயிற்றுவிப்பதன் மூலம் யுத்தகாலத்தில் காயமுற்றவர்களுக்கு அது உதவலாம் (1).
- இக் குழுக்களை அங்கீகரித்து பாதுகாக்க சர்வதேச இணக்கப்பாட்டைக் கொணருதல் என்பவையாகும் (2)







1863 ல் டுனாட்டும் வேறு நான்கு ஜெனீவா பிரசைகளும் சேர்ந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழுவை (ஐசி.ஆர்சி) அமைத்தனர்.





1. இது தேசிய செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களை உருவாக்கியது
2. இது சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் அடித்தளமானது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநிலை இடையீட்டாளராக பணி செய்யும் ஐசிஆர்சி, யுத்தம் முடிவுற்றதும் போர்க் கைதிகளையும் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடிமக்களையும் அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்பவும் அனுப்பி வைக்கும் (சர்வதேச யுத்தங்களின் போது)



களத்தில் நடப்புகளை நன்கு அறிந்தவர்கள் என்ற வகையில், தேசிய சங்கத்தின் தொண்டர்கள், ஐசிஆர்சி யின் பணிகளுக்கு முக்கிய பங்கை ஆற்றி வருகின்றனர். நிலைமைகள் மோசமடையும் தருணத்திலும் அவர்கள் பாதிக்கப்பட்டோரை அனுகி உதவி அளிக்ககூடியவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிலுவை செம்பிறைகளின் இணையம் 1919 ல் சம்மேளனமாகி, தேசிய சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதுடன் இயற்கை மற்றும் அனர்த்த சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்து உரிய பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சங்கங்களுக்கு உதவிபுரிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றி டூனாட் (1828-1910 )

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் உருவாக இவரது எண்ணம் ஏதுவாக இருந்தது. இவர் செல்வந்தனாக இருந்து ஈற்றில் ஒரு வறியவராக மாறினாலும் சமாதானத்துக்கான இணை நோபல் பரிசை பெற்றார்.

ஜெனீவா நகரத்தில், 1828 மே 8 ல் மதிப்பும் தயாள குணமும் கொண்ட ஒரு கல்வினிஸ் குடும்பத்தில் பிறந்தார். இரண்டாம் நிலை கல்வியை பூரணப்படுத்தாத தொடரமுடியாத நிலையில் ஹென்றி டூனாட், தொழில் பயிற்சிக்காக ஜெனீவா வங்கியில் இணைந்தார். 1853 ல் செட்டிப் (Sétif) சுவிஸ் குடியேற்றத்தை பொறுப்பேற்க அல்ஜீரியாவுக்கு பயணித்தார். தானிய ஆலை ஒன்றை நிறுவ எண்ணிய அவருக்கு, அப்போது அவசியமானதாக இருந்த நிலத்தைப் பெற உதவி கிட்டவில்லை. பின்னர் ரியூனிசியா சென்று ஜெனீவா திரும்பிய அவர், தொழில் விடய ஆவணம் ஒன்றை பெறுவதற்கு
சக்கரவர்த்தி 3ம் நெப்போலியனைச் சந்திக்க விரும்பினார்.

அவ் வேளையில், ஆஸ்திரியருக்கு எதிரான யுத்தத்தில் வட இத்தாலியில் தனது பிரான்சையும் மற்றும் இத்தாலியையும் சேர்ந்த படைகளை வழிநடத்திக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. அங்கேயே சக்கரவர்த்தியை தேடிச் செல்கிறார் ஹென்றி டூனாட். சொல்பரினோவுக்கான யுத்தம் லொம்பாடியில் முடிவுற்ற சில மணித்தியாலங்களில், அங்கு செல்கிறார் ஹென்றி டூனாட்.

ஜெனீவா திரும்பிய அவர், "சொல்பரினோவின் நினைவு" என்னும் நூலை எழுதினார். காயமடைந்தோரின் நலம் பேணும் குழு ஒன்று உருவாக இந் நூல் வழி வகுத்தது. இக் குழுவானது பின்னர் செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐசிஆர்சி) என பெயர் இடப்பட்டது. டூனாட் இதில் செயலர் அங்கத்துவம் வகித்தார். ஐரோப்பிய மன்றுகளில் அரச அதிபர்கள், மன்னர்கள் பட்டத்து இளவரசர்கள் போன்றோரை சந்தித்த டூனாட் பிரபல்யம் அடைந்தார். இருப்பினும், 1867 ல் அவரது நிதி நிலைமை மோசமடைய, அவரின் வங்கிக் கணக்கு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. முற்றும் இழந்த அவர் ஒரு மில்லியன் சுவிஸ் பிராங் தொகையளவுக்கு ( 1860 ல் மதிப்பு படி) கடனாளியானார்.

ஜெனீவாவில் அவருக்கு ஏற்பட்ட இவ் அவமானத்தால் அவர் சர்வதேசக் குழுவின் செயலர் நிலையிலிருந்து மட்டுமின்றி, அங்கத்துவத்திலிருந்தும் தானாக பதவி துறந்தார். 8 செப்டம்பர் 1867 ல் இவரது விலகலை குழு ஏற்றுக் கொண்டது. பரிஸ் நகரத்துக்கு சென்ற டூனாட் வீதியோர இருக்கைகளில் உறங்கி காலத்தைக் கழிக்கும் நிலைக்குத தள்ளப்பட்டார். இவ்வேளையில், அரசி யூயினா, ஜெனீவா உடன்படிக்கையை கடல் யுத்தங்களுக்கும் விரிவுபடுத்தும் நோக்கில், யோசனை பெறுவென அவரை ரியுலறிஸ் மாளிகைக்கு வரும்படி அழைப்பு விடுக்கிறார். ஆஸ்திரியா, ஒல்லாந்து, சுவீடன், பிரஸ்யா மற்றும் ஸ்பானிய நாட்டு தேசிய சங்கங்களின் கௌரவ அங்கத்தவராக நியமிக்கப்பட்டார் டூனாட்.

1870 ல் பிரான்சும் பிரஸ்சியாவும் யுத்தத்தில் ஈடுபட்ட வேளைகளில் காயமுற்ற படையினர் பாரிசுக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களுக்கு டூனாட் ஆறுதல் அளித்தார். போரில் இறந்தவர்களை அடையாளம் காண்பதை இலகுவாக்க, போர் வீரர்கள் அடையாளப் பட்டி அணிய வேண்டியது பற்றி டூனாட் அறிமுகம் செய்தார்.

சமாதானம் ஏற்பட்ட வேளையில், லண்டன் சென்ற டூனாட், யுத்தக் கைதிகளின் பிரச்சனைகளுக்கென ஒரு அரசப் பிரதிநிதிகள் மாநாடு ஒன்றை நடாத்த முயற்சிகளை மேற்கொண்டார். பிரான்ஸ் (தியர்ஸ்) அதற்கு ஊக்கமளித்தாலும் இங்கிலாந்து அத் திட்டத்தை வரவேற்கவில்லை.

## வறுமையின் காலங்கள்

நீக்குரோ இனத்தவர்களை கடத்தல் மற்றும் அடிமை வியாபாரம் தொடர்பில் சர்வதேச மாநாடு ஒன்றை 1875 பெப்ரவரி 1 ல் ஹென்றி டூனாட் ஒழுங்கு செய்தார். அதைத் தொடர்ந்து வந்த காலங்கள் ஹென்றி டூனாட் க்கு அலைச்சலும் வறுமை நிறைந்ததாகவும் அமைந்தது. அவர் கால்நடையாக அல்சக், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்குச் சென்றார். அங்கு தருமத்திலும், நண்பர்கள் தயவிலும் வாழ்ந்தார்.

இறுதியில், 1887 ல் சுவிஸ் திரும்பிய அவர் கொன்ஸ்ரன்ஸ் ஆற்றை நோக்கி அமைந்திருந்த கிடன் கிராமத்தில் சுகவீனமுற்று இருந்தார். உள்ளூர் மருத்துவமனையில் தஞ்சம் அடைந்திருந்த அவரை ஜோர்ஜ் பௌம்பெர்கர் என்னும் ஊடகவியலாளர் அடையாளம் கண்டு கொண்டார். ஹென்றி டூனாட் பற்றி அவர் எழுதியவை சில நாட்களுள், ஐரோப்பா முழுவதும் பத்திரிகைகளில் மீள் பிரசுரமாகியது.
உலகம் முழுவதுமிருந்து அனுதாபச் செய்திகள் அவருக்கு வந்து சேரத் தொடங்கின. திரும்பவும் ஒரே நாளில் மதிப்பும் பிரபல்யமும் அவருக்கு கிடைக்கத் தொடங்கின. 1901 ல் அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. 1910 ஒக்டோபர் 30 ல் ஹென்றி டூனாட் மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவரது பிறந்த தினமான மே மாதம் 8 ம் திகதி, செஞ்சிலுவை மற்றும் செம்பிறைத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமானது இலங்கையின் தேசிய சங்கமாக அங்கீகாரத்தைப் பெற்று ஜெனீவா சாசனத்தின் கீழ் மனிதாபிமான தொண்டுப் பணிகளான: அனர்த்த நிவாரணம், சுகாதாரம் மற்றும் சமூக நிகழ்வுகளில் தொண்டர்களை ஈடுபடுத்தியும் மேலும் மனிதாபிமானத்தின் விழுமியங்களை மேம்படுத்துவதில் நாடு முழுவதிலும் உள்ள 25 மாவட்டங்களின் கிளை வலையமைப்பினூடாக தனது தொண்டர்களின் அர்பணிப்பான சேவை வாயிலாக நடாத்திவருகின்றது.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சரித்திரம்

1936 ம் ஆண்டு தை 17 ஆம் திகதி குயின் கவுஸ் எனும் இடத்தில் நடைபெற்ற பொது ஒன்றுகூடலில் தீர்மானம் எடுக்கப்பட்டதோடு அக்காலத்தில் ஆளுநராக இருந்தவரின் மனைவியானஸ்ரப்ஸ் அம்மணியின் தலைமையில் வைத்தயர் பிட்ஸ் றோய் செயலாளராகவும் திரு. ஒலிவ் குணதிலக்க பொருளாளராகவும் கடமைகளை ஏற்று பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் சிலோன் (இலங்கை) மத்திய ஆலோசனை சபைக்கிளை 1936 ம் ஆண்டு மாசி 26 ம் திகதி இலங்கையில் நிறுவப்பட்டது. மேலும் 1949 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிலோன் (இலங்கை) செஞ்சிலுவைச் சங்கம் என புதிய சட்டதிட்டங்களுடன் பெயர்மாற்றப்பட்டது. 1952ம் ஆண்டு ஐ.சி.ஆர்.சி மற்றும் சம்மேளனத்திடம் இருந்து தேசியச் சங்கம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றது.

1972ம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நவீன தேசிய சட்டதிட்டங்களின் அறிமுகத்துடன் இச்சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என பெயர் மாற்றப்பட்டது பின் சமூக சேவைகள் அமைப்பாக 1980ம் ஆண்டு சமூக சேவைகள் சட்டத்தில் பதிவுசெய்யப்பட்டது.

2002ம் ஆண்டில் இ.செ.சி.ச இன் புதியதோர் சட்டதிட்டம் அறிமுகஞ்செய்யப்பட்டதுடன் முகாமைத்துவம் மற்றும் ஆளுநர்களின் பொறுப்புக்கள் வேறுபிரிக்கப்பட்டது






International Committee of the Red Cross
Main Delegation Colombo
29, Layards Road
Colombo 05
Tel: +94 (0)11 2503346
Fax: +94 (0)11 2503348
Email: col_colombo@icrc.org
Web: www.icrc.org

ICRC

Sri Lanka Red Cross Society
104, Dharmapala Mawatha,
Colombo 07
Tel: + 94 (0) 11 2691095
Fax: + 94 (0) 11 2695434
Email: president@redcross.lk
Web: www.redcross.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org